விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஷூ பங்குனி மீ 03-ம் உ | வெள்ளிக்கிழமை | (16 - 03 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஷஃபா 18 | ஓசை 26

## தெஹிவளை நகைக்கடையில் நேற்றுமாலை லட்சம் கொள்ளை

(கொழும்பு)

தெஹிவளைச் சந்தியிலுள்ள நகைக்கடையொன்றில் நேற்றிரவு எட்டரை மணியளவில் திடீரெனப் புகுந்த ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒருலட்சத்து முப்பதினாயிரம் ரூபாய் நகைகளும் ரொக்கமுமாகக் கொள்ளையடித்துச் சென்றது இனந்தெரியாத இந்த ஆயுதந்தாங்கிய கோஷ்டியில் நன்குபேர் இடம்பெற்றிருந்தனர். மோட்டார் கார் ஒன்றில் வந்த இவர்கள் திடீரென கடையினுள் புகுந்து துப்பாக்கியைக் காட்டி மிரட்டிக் கொள்ளையடித்துவிட்டு மின்னல் போல் மறைந்து விட்டனராம்.

## ஆறு எதிர்க் கட்சிகள் பொதுக்கூட்டத்திற்கு ஆயத்தம்

விலைவாசி உயர்வு, மனித உரிமை மீறல், ஜனநாயக உரிமை அழிவு என்பவற்றை கண்டித்து ஆறு எதிர்க்கட்சிகள் பொதுக் கூட்டம் ஒன்றை நடாத்தவுள்ளன.

இக்கூட்டத்தை நடாத்த அரசின் அனுமதிக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, நவசமசமாஜக் கட்சி, ஐக்கிய சோஷலிச முன்னணி, தேச விமுக்தி ஜனநாயக கட்சி என்பனவே இக்கூட்டத்தை நடாத்தவுள்ளன.

### ஈரானிலும் செய்தியாளருக்கு மரண தண்டனை!

(தெஹ்ரான்)

ஈரானில் உளவு பார்த்த குற்றச்சாட்டின் மீது பிரிட்டிஷ் பத்திரிகையாளர் ஒருவருக்கு ஈரானில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்க்குழு அகதிகளுக்கு எதிராக இ.காங்கிரஸ் ஆதிவாசிகள் ஒரிஸாவில் ஆர்ப்பாட்டம்

(புவனேஸ்வர்)

ஒரிஸா மாநிலத்தில் கோராக்பூர் பகுதியில் புகலிடம் அளிக்கப்பட்ட இலங்கைக்குழுக்களைச் சேர்ந்தவர்களுக்கும் அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் எதிராக இந்திய காங்கிரஸ் கட்சியின் ஒரிஸா மாநிலத்தைச் சேர்ந்தவர்களான ஆதிவாசிகளுடன் சேர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த அகதிகளை "உடனடியாக ஒரிஸாவிலிருந்து இலங்கைக்கோ தமிழ் நாட்டுக்கோ திருப்பி அனுப்பவேண்டுமென்று இவர்கள் கோரிக்கைவிடுத்தனர்.

இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த ரகுநாத் என்பவரே இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் முன்னணியில் நின்றார். 'அகதிகள்' தங்கியிருக்கும் இடங்களுக்கு உணவு மற்றும் பொருட்களைக் கொண்டு செல்வதைத் தடுக்குமுகமாக வீதிகளில் தடைகள் போடப்பட்டிருந்தன. ஒரிஸாவை அகதிகள் மாநிலமாக்க வேண்டாமென்றும் ஒரிஸா மக்களின் பாரம்பரிய கலாசாரம், பண்பாடு ஆகியவற்றைச் சீர்குலைக்க வேண்டாமெனவும் இவர்கள் குரல் எழுப்பினர்.

இந்த எதிர்ப்பைக் கண்டு

(6ஆம் பக்கம் பார்க்க)

# புதிய நட்புறவு ஒப்பந்தத்தில் அதிகாரப் பரவல் இல்லை!

## பல்கலைக்கழகத்தில் மகேந்திரராசா

(யாழ்ப்பாணம்)

இன்று யாழ்ப்பாண பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம் மீண்டும் திறந்து வைக்கப்படவுள்ளது. இவ் வைபவத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா கலந்து கொள்வார் என எதிர்பார்ப்பதாக மறுமலர்ச்சிக் கழக செயலாளர் தெரிவித்துள்ளார்.

மறுமலர்ச்சிக் கழக திறப்பு விழாவைத் தொடர்ந்து மாணவர்களுடன் நடைபெறவுள்ள ஓர் கலந்துரையாடலிலும் மகேந்திரராசா கலந்துகொள்வார் எனவும் தெரிவித்தார்.

(லோ)

## குறமகள் கதைகள் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் இலக்கிய வட்டத்தின் குறமகள் சிறுகதைத் தொகுதி

(6-ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப் படை வெளியேறியபின் தமிழர்பாதுகாப்பு அவர்கள் பொறுப்பு

### இந்திய பாராளுமன்றில் அமைச்சர் குஜரால்

(புதுடில்லி)

புதிய நட்புறவு ஒப்பந்தத்தில் வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு அதிக அதிகாரப் பரவலாக்கல் அளிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை இ லை என்றும், இந்தியப்படை வெளியேறியதும் வடக்கு

## இளம் பெண் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

கல்லியங்காட்டுப் பகுதியைச் சேர்ந்த விஸ்வலிங்கம் ரோகினி (வயது 23) என்ற இளம் பெண் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

பத்து வருடங்கள் இவரை தொய்வு (அஸ்மா) நோய் பீடித்திருந்த தென்றும் அதன் வேதனையை தாங்கிக் கொள்ள முடியாமல் இப்பெண்

## திருமலையில் சகஜ நிலைக்கு அரச படையும் புலிகளுமே!

### அமைச்சர் ரஞ்சன் கூறினார்

(கொழும்பு)

திருகோணமலையிலிருந்து இந்திய இராணுவம் வாபஸானதும் அப்பகுதியில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியும், இலங்கை ஆயுதப்படையினரும் கூட்டாக செயற்பட்டு சகஜநிலையை ஏற்படுத்துவர் என்று அமைச்சர் ரஞ்சன் விஜயரட்னா நேற்றுத் தெரிவித்தார்.

இலங்கையில் தற்போதுள்ள சுமார் ஐயாயிரம் இந்தியப்படையினர் அடுத்த சில தினங்களுக்குள் நாடு திரும்பிவிடுவார்கள் என எதிர்பார்க்கப் படுவதாக வெளி

# அதிகாரப் பரவல் இல்லை!

திரு. கோ. மகேந்திரராசா கலந்து கொள்வார் என எதிர் பார்ப்பதாக மறுமலர்ச்சிக் கழக செயலாளர் தெரிவித் துள்ளார்.

மறுமலர்ச்சிக் கழக திறப்பு

## குறமகள் கதைகள் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் இலக்கிய வட்டத்தின் குறமகள் சிறுகதைத் தொகுதி

(6-ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியப் படை வெளியேறியபின் தமிழர்பாதுகாப்பு அவர்கள் பொறுப்பு

## இந்திய பாராளுமன்றில் அமைச்சர் குஜரால்

(புதுடில்லி)

**புதிய நட்புறவு ஒப்பந்தத்தில் வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு அதிக அதிகாரப் பரவலாக்கல் அளிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை இ லை என்றும், இந்தியப்படை வெளியேறியதும் வடக்கு கிழக்கு பகுதியில் தமிழர்களின் பாதுகாப்பு 'தமிழ்ப் போராளிகளுக்கும் இலங்கை அரசுக்குமே உண்டு எனவும் இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜரால் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

இலங்கை-இந்திய நட்புறவு ஒப்பந்தத்திற்கான இலங்கையின் பதிலை இந்தியா எதிர் பார்த்து இருப்பதாக இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜரால் இந்திய பாராளுமன்றத்தில் கேள்வி நேரத்தில் எழுத்து மூலமான பதிலில் தெரிவித்தார்.

இந்த நட்புறவு ஒப்பந்தம் செய்வது பற்றிய யோசனையை இலங்கை அரசுதான் தெரிவித்ததாகவும், அதனை இலங்கை மீண்டும் மீண்டும் இந்தியாவிடம் தெரிவித்து வந்ததாகவும் அவர் மேலும் சொன்னார்.

இதனையடுத்து இந்த ஒப்பந்தம் குறித்து புதிய நகல் திட்டம் கடந்த ஜனவரி 12இல் அனுப்பப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியப் படையினர் இலங்கையிலிருந்து முற்றாக வாபஸ் பெறப்படுவதற்கு முன்பு வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலைப் பிள்ளைகளில் 80 வீதமானோருக்கு பற்சூத்தை

(பண்டத்தரிப்பு)

பாடசாலைப் பிள்ளைகளில் 80 வீதமானோர் பற்சூத்தை நோய்க்காளாகிக்காணப்படுவதாக பண்டத்தரிப்பு பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.

தமது பகுதியில் 17 பாடசாலைகள் இருப்பதாகவும், அப்பாடசாலை பிள்ளைகளில் சுகாதார பரிசீலனை செய்த போது இது தெரியவந்ததாக தெரிவித்தார்.

டாக்டர் கணேசலிங்கம் இது பற்றித் தெரிவிக்கையில் பிள்ளைகள் கண்ட கண்ட நேரங்களில் இனிப்பு பதார்த்தங்களை சாப்பிடாமல் சாப்பாட்டிற்குமேல் சாப்பிட்டு, உணவின்பின் வாயை நன்கு கொப்பளித்தும், படுக்க போகுமுன் பிறஸால் நன்கு பல் தீட்டியும் வாழும் பழக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் பல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சையில்ஏற்பட்டதோல்வியால் இரு பெண்கள் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் தோல்வி அடைந்த காரணத்தினால், இரு இளம் பெண்கள் நச்சு விதை உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டார்கள்.

இறந்தவர்கள் இருவரும் வெவ்வேறு இடங்களைச் சேர்ந்தவர்கள் என்று யாழ். வைத்தியசாலைப் பொலிஸ் அதிகாரி நேற்றுத் தெரிவித்தார்.

சசிகலா பத்மநாதன் (வயது 20) என்ற பளையைச் சேர்ந்தவரும், திருஞானம் ஜெயந்தி

(6ஆம் பக்கம் பார்க்க)

# 2000 ஆண்டில் நாடு முழுவதும் மின் விநியோகம் கிடைத்துவிடும்

(கொழும்பு)

இலங்கை மின்சாரசபைக்கு அடுத்த மூன்று வருடங்களுக்கு 2400 கோடி ரூபா தேவைப்படுவதாக எரிசக்தி அமைச்சர் பெஸ்டஸ்பெரேரா தெரிவித்தார்.

அடுத்த மாதம் முதல் மின் கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இருபத்தையாயிரம் கிராமங்களுக்கு மின்சாரம் தேவைப்படுகிறது. அதில் எட்டு ஆயிரம் கிராமங்களின் திட்டங்கள் தயார். மிகுதிக்கு அடுத்த மூன்று வருடகாலத்தில் 2400 கோடி ரூபா தேவைப்படுகிறது எனவும் அவர் சொன்னார்.

1987 இல் 29 ரூபாவாக இருந்த அமெரிக்க டாலர் தறபோது 40 ரூபாவாக உயர்ந்துள்ளது. இதனால் மின்கட்டனத்தை அதிகரிக்க வேண்டியுள்ளது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## இளம் பெண் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

கல்லியங்காட்டுப் பகுதியைச் சேர்ந்த விஸ்வலிங்கம் ரோகினி (வயது 23) என்ற இளம் பெண் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

பத்து வருடங்கள் இவரை தொய்வு (அஸ்மா) நோய் பீடித்திருந்த தென்றும் அதன் வேதனையை தாங்கிக் கொள்ள முடியாமல் இப்பெண் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார் என்று யாழ். வைத்தியசாலை பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

(தி

## வெலிஓயாவில் இரண்டு புத்தபிக்குகள் கைது

(கொழும்பு)

ஜே. வி. பி யுடன் தொடர்பு வைத்திருந்ததாகக் கருதப்படும் இரண்டு புத்த பிக்குகளை வெலிஓயாவில், பராக்கிரமபுரத்தில் பொலிசார் கைது செய்துள்ளனர்.

புலன் விசாரணைகளின் போது இவர்கள் ஜே வி. பி. யுடன் தொடர்பு கொண்டு நாச வேலைகளில் ஈடுபட்டிருந்தமை நிருபணமாகிய பிறகுதான், புத்தபிக்குகள் கைது செய்யப்பட்டார்கள் என்று கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## திருமலையில் கிராமசேவகர்களை காணவில்லை

(கிருகோணமலை)

கடந்த ஒரு மாத காலமாக மூன்று தமிழ் கிராமசேவை உத்தியோகத்தர்களைத் திருகோணமலையில் காணவில்லையாம். இன்றுவரை இந்த மூன்று கிராமசேவகர்கள் எங்கிருக்கிறார்கள் என்பது பெரிய மர்மமாக இருக்கிறது.

(6-ஆம் பக்கம் பார்க்க)

## மாணவருக்கு வயிற்றோட்டம்

(கொழும்பு)

மதிய உணவு அருந்திய இருநூறுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு வயிற்றுவலி, வயிற்றோட்டம், மயக்கம் பிடித்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் சகஜ நிலைக்கு அரச படையும் புலிகளுமே!

## அமைச்சர் ரஞ்சன் கூறினார்

(கொழும்பு)

திருகோணமலையிலிருந்து இந்திய இராணுவம் வாபஸானதும் அப்பகுதியில் விடுதலைப்புலிகள்மக்கள் முன்னணியும், இலங்கை ஆயுதப்படையினரும் கூட்டாக செயற்பட்டு சகஜநிலையை ஏற்படுத்துவர் என்று அமைச்சர் ரஞ்சன் விஜயரட்னா நேற்றுத் தெரிவித்தார்.

இலங்கையில் தற்போது எஞ்சியுள்ள சுமார் ஐயாயிரம் இந்தியப்படையினர் அடுத்த சில தினங்களுக்குள் நாடு திரும்பிவிடுவார்கள் என எதிர் பார்க்கப் படுவதாக வெளி நாட்டு பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜரட்னா நேற்று செய்தியாளரிடம் கூறினார்

திருகோணமலை நகரை விட்டு வெளியேறியுள்ள இந்திய ஜவான்கள் கப்பல் ஏறுவதற்காக துறைமுகத்தில் காத்திருப்பதாகத் தெரிவித்த

(6-ஆம் பக்கம் பார்க்க)

## ராக்கிங்ஓர் அநாகரிகச் செயல் மாணவர் அவை கண்டனம்

ராக்கிங் என்ற போர்வையில் பல்கலைக்கழக புதிய மாணவர்கள் மீது குறிப்பிட்ட சில சிரேஷ்ட மாணவர்களினால் திணிக்கப்படுகின்ற அநாகரீ மான செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம் என பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

மேலும் தற்போது பல்கலைக்கழகத்திற்கு வெளியே நடைபெறுகின்ற மேற்படி சம்பவங்கள் சம்பந்தமாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றி

(6-ஆம் பக்கம் பார்க்க)

## பகலில் ஆசிரியர் இரவில் கொள்ளையன்

(கொழும்பு)

பகலில் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் பட்டதாரி ஆசிரியர் ஒருவர் இரவு நேரத்தில் ஆயுதத்துடன் கொள்ளைகளில் ஈடுபட்டதால் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொரவேவா, ரெனியாயா பகுதியில் உள்ள வீடுகளிலேயே இவர் தனது கைவரிசையைக் காட்டி வந்தாராம்.

இவர் ஜே. வி. பியுடன் கடந்த இரண்டு வருடங்களாக தொடர்பு கொண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

### ரயில் நிலைய

## வீதிகளில் மின்விளக்குகள் இன்மையால் மக்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

வடபகுதி ரயில் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்துக்கு வரும் வீதிகள் குன்றும் குழியுமாகவே காணப்படுகின்றன

ஆஸ்பத்ரி வீதியிலிருந்தும் பலாலி வீதியிலிருந்தும் செல்லும்வீதிகளே இவ்வாறுகாணப்படுகின்றன.

அத்துடன் இரவு நேரம் போதிய மின் விளக்குகளும் இன்றி இருளாக காட்சியளிக்கின்றன. இதனால் இரவு நேரமும், அதிகாலையில் ரயில் நிலையம் வரும் பயணிகள் பல அசௌகரியங்களுக்கு ஆளாகின்றனர்.

# பயிலுனர் ஆசிரியர்களுக்கு தொழிற் நூட்டல் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

பயிலுனர் ஆசிரியர்களுக்கான ஒரு நாள் தொழிற் நூட்டல் பயிற்சியிற் பங்குபற்றுவதற்காக அந்த அந்த உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளுக்குள்தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்கள் அழைக்கப்படவுள்ளார்கள்.

வேலனை, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவு செய்யப்பட்டோர் பத்தொன்பதாம் திகதி யா/சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலயத்திற்கும், சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்டோர், இருபதாம் திகதி யா/டிறிபேக் கல்லூரிக்கும், தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்டோா இருபத்திஇரண்டாம் திகதி யா/யூனியன கல்லூரிக்கும், சங்கானை சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவானோர் இருபத்திமூன்றாம் திகதி யா/பண்டத்

(6-ஆம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

விருப்பவேக்கு

## சேவை

RAJZ BRAND எவசில்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும், உங்கள் விருப்பமே எங்கள் சேவை! பற்பல டிசைன்களில் பற்பல ரகங்கள்! சாப்பாட்டுப் பீங்கான்கள், செற் சட்டிகள், தாச்சிச் சட்டிகள், றேகள், சோஸ்பான்கள். பொரியல் சட்டிகள், டின்னர் செற்கள், ரீ செற்கள் கோவிற் சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம் RAJZ BRAND, பார்வை அறை S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (B-202)

## றோனியோ

தரமான றோனியோ பிரதிகளை தாமதமின்றி பெற்றுக்கொள்ள நம்பிக்கை நிறுவனம் ‘கிளீன் கட்’ B 224

சீயாக்காய், பயறு, அரிசி, வெந்தயம் ஆகிய நான்குஇயற்கை பொருட்கள் அடங்கிய ‘‘சீயாக்காய் பவுடர் எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். **M.G.M, No 777 K.K.S. Road, Jaffna.** (B 64)

# புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்த பின்னரே புளொட் ஒப்படைக்குமாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களைக் கையளித்த பிறகு தான் புளொட் தனது ஆயுதங்களைக் கையளிக்கும் என்று புளொட் அரசியல் பொறுப்பாளர் சித்தார்த்தன் சென்ற செவ்வாயன்று அரசாங்கத்துக்குத்தெரிவித்துள்ளார்.

வடக்கும் கிழக்கும் இன்று விடுதலைப் புலிகளின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளது. ஆகவே புளொட்டின் அரசியற் கட்சியான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி வடக்கிலும் கிழக்கிலும் ஜனநாயக அரசியலின் பங்கு கொண்டு நிலைத்திருப்தானால், நாம் ஆயுத் பாணிகளாக இருக்கவேண்டும் என்றும் அவர்சொன்னார்.

எந்த விதமான முரண்பாடுகளையும் தாம்விரும்பவில்லையென்றும், விடுதலைப் புலிகள் அமைப்புமுற்றாகத்தமது ஆயுதங்களைக் கையளித்த பிறகு தான் தம்மால் ஆயுதங்களை ஒப்படைக்க முடியுமென்று சித்தார்த்தான் தெரிவித்தார்.

இந்திய இராணுவம் வெளியேறிய பிறகு விடுதலைப் புலிகள்எமது மல்த்தை(அம்பறை) செட்டிகுளம் முகாம்கள் மீது மேற் கொண்ட தாக்குதலின் போது 20 பேர் வரைஉயிரிழந்தனர். விடுதலைப் புலிகளின் தாக்குதல்களைச் சாமளித்த தாம் எமது முகாம்களை நாள்டிலிருந்து காடுகளுக்குட் மாற்றி அமைத்துள்ளோம்- இவ்வாறு சித்தார்த்தான்தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு சமாதானக் குழப்பம் பற்றிக் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கும் பதிலளிக்கையில் அது சாத்தியப்படக் கூடிய தல்ல என்றும் சித்தார்த்தான் தெரிவித்தர்

## விளையாட்டு போட்டி

(கிளிநொச்சி)

விளையாட்டு அமைச்சினால் கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடாத்தப்படவிருக்கும் மெய்வல்லுநர் போட்டி இம்மாதம் 29ஆம் திகதி வியாழக்கிழமை பரந்தன் இளைஞர் வட்ட விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் திரு கே. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற இருக்கும் இவ் வைபவத்தில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (49)

# “இன்று விடுதலைப்புலிகள் சிறீலங்கா அரசைப் போல் சமபலம் பெற்றுள்ளனர்

- டொமினிக்

(அச்சுவேலி)

‘‘இலங்கை அரசாங்கம் தனது சிங்களப் பேரினவாதப் போக்கை மீண்டும் தமிழினத்தின்மீது பிரயோகிக்குமானால் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அதற்கு எதிராகப் போராடி தமிழ் இனத்தின் உரிமையை நிலைநாட்டுவார்கள். இன்று ஏற்பட்டுள்ள அமைதி நிலை எவ்வளவுக்கு நிலைக்கும் என்பது அரசாங்கத்தின் நிலைப்பாட்டில்தான் தங்கியுள்ளது’’

இவ்வாறு தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் ஸ்ரான்லி டொமினிக் கூறினார்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அச்சுவேலி பிரதேச அலுவலக திறப்புவிழா விடுதலைப் புலிகள் அரசியல் பிரிவின் வலிகாமப் பொறுப்பாளர் திரு. இ. ஆஞ்சநேயர் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் சலந்து கொண்ட பெரும் திரளான மக்கள் மத்தியில் திரு.டொமினிக் தொடர்ந்து உரையாற்றும்போது-

சமபலம் உடைய இரண்டு அமைப்புக்கள் இடையே நிலவும் பிரச்சினையைத்தான் பேச்சுவார்த்தை மூலம் பேசித் தீர்க்க முடியும். இந்த வகையில் இலங்கை அரசாங்கம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. எமது இயக்கத்தின் மனோதிடமும் ஆயுத பலமும் தான் அரசாங்கத்தின் கவனத்தை பேச்சுவார்ர்த்தையின் பக்கம் திரும்பச் செய்தது.

எமது பலம் குன்றுமானால் அரசாங்கம் தனது போக்கை மாற்றி பழைய நிலைக்கு திரும்பலாம். இன்று நிலவும் அமைதி நிலையானது என்றோ தமிழ் இனத்தின் உண்மையை பெற்றுத் தந்து விட்டது என்றோ நினைப்பது தவறு. இந்த அமைதி எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும் என்பது அரசாங்கத்தின் போக்கிலும் பேச்சுவார்த்தையின் பெறுபேற்றிலும் தான் தங்கியுள்ளது எனக் கூறினார்.

திரு. இ. ஆஞ்சநேயர் தனது உரையில் இந்திய இராணுவத்தை எமது மண்ணில் இருந்து அகற்றுவதற்கு நாம் மேற்கொண்ட உறுதியான போராட்டம் சிங்களமக்களை எமது இயக்கத்தின் மீது நம்பிக்கை கொள்ளச் செய்தது. எமது பலத்தின் உறுதியை மேலும் பாதுகாத்து கொள்ள வேண்டும் எனக் கூறினார்.

புத்தூர் கண்டிக்காடு மோதலில் வீரமரணம் அடைந்த நேருவின் தாயார் விளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைத்ததுடன்நாடாவை வெட்டி மக்கள் முன்னணிக் காரியாலயத்தை திறந்து வைத்தார்.

வடமாரட்சி பகுதி மாணவர் பிரிபு தலைவர் செல்வம், திரு. க. பேரின்பநாயகம், மூதூர் கைலாசபிள்ளை திரு. கே. செல்லத்துரை உட்பட பலர் உரையாற்றினர்.

திறப்புவிழாவை அடுத்து அச்சுவேலி மகாவித்தியாலய கலை அரங்கத்தில் ‘‘நடந்து வந்த பாதையிலே’’ வில்லுப் பாட்டும், தெருக்கூத்தும் நடைபெற்றது.

# உ. தரவகுப்பு மாணவருக்கு திங்கள், வெள்ளி

ஆகஸ்ட் 1990 இல் க. பொ. த. உயர்தரப்பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு மாத்திரம் திங்கள், வெள்ளி நாட்களில் மாலைநேர வகுப்புக்கள் நடாத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஏனய வகுப்புக்களை திங்கள், வெள்ளிக் கிழமைகளில் நடத்தக்கூடாதெனவும் வடபகுதி தனியார் கல்வி நிலைய ஒன்றியம் அறிவித்துள்ளது.

யாழ். ‘பொண்ட்’ கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியப் பொதுச் சபைக் கூட்டத்தில் இத்தீர்மானம் மேற்க்கொள்ளப்பட்டது. திரு. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டடத்தில் மாணவர்களின் நன்மை கருதி சேவை நோக்குடன் ரியூட்டரிகள் இயங்க வேண்டும் என்றும் மாணவர்களிடம் பல வழிகளிலும் பணத்தைச்சுரண்டும் முறையினைக் கைவிட்டு நியாயமான கட்டணங்களை மாத்திரமே அறவிட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. (23)

# ஜப்பான் உணவு உற்பததிக்கு உதவி

## யாழ் நகரில் இன்றைய சினிமா

80 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்’
ரஜனி - அமலா நடித்த
**கொடி பறக்குது**
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
**மனிதன்**
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
ஹரன் யாழ்.
10-30 2-30 6-30
கமலஹாசன்
சரண்யா நடித்த
**நாயகன்**
(கலர்)

லிடோ (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
**பூ- பூவா பூத்திருக்கு**
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
**ராஜாதி ராஜா**
(கலர்)

12ஆவது வாரம்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
**வருஷம் 16**
(கலர்)

ஸ்ரீதர் (யாழ்)
10-30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா
**அவள் ஒரு தொடர்கதை**

வின்சர் - யாழ்
10.30 2.30 4.30 7.00
**SUPER MAN**
குடும்பத்துடன்

# காணிப் பகிர்வு மக்கள் அதிருப்தி

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்திலுள்ள கரும்பு செய்கை காணிகள் இன விகிதாசாரஅடிப்படையில் வழங்கப்படவில்லை என ஜனாதிபதியிடம்பல அமைப்புகள் புகார் செய்துள்ளது.

இது தொடர்பாக கரையோர விவசாயிகள்சம்மேளன பொதுச் செயலாளர் ஜனாப் ஈஸ்டன் இப்ராகீம் ஜனாதிபதிக்குகடிதம் அனுப்பியுள்ளார்.

அதில் கூறப்படுவதாவது.

வரப்பத்தான் சேனை, கல்மடு, தீகவாவி ஹிங்குரான், நீத்தை போன்ற5 வலயங்களில் இக்காணி பகிர்ந்தளிககப்பட்டது.

இதில் சிங்களம் 2757, தமிழ் -233, முஸ்லிம்1048என காணி பெற்றனர். ஆனால் மாவட்ட இன விகிதாசாரம் முறையே 1772, 692,1630 என அமைகின்றது.

எனவே இனவிகிதாசாஅடிப்படையில் செயல்படுவோம் என்றஜனாதிபதியின் கொள்கை அமுல்செய்யப்படவில்லை என இதில் கூறிள்ளளார். (37)

## கோவில் மதில்

(விசேட நிருபர்)

யாழ். மத்திய சந்தை ஞான வைரவர் ஆலயத்தைச் சுற்றிலும் மதில்கள் அமைக்கப்பட்டு வருகிறது.

ஆலயத்தைத் தரிசிப்பதில் இடையூறு இல்லாமல் மதில் சுவர்கள் மத்தியில் கம்பியன்னல்கள் பொருத்தப்பட்டுள்ளன. (21)

**NEW SCIENCE ACADMEY**
IN FRONT OF B M.C. JAFFNA.
**90 A/L**
**Physics**
BY
சோதிலிங்கம்
TUE -- THU -- 4.00
**Mechanics**
WED -- 4.00 - 6.00
**Electricity**
**PAPER CLASS**
SAT & SUNDAY 1.30
MODEL PAPER
பிரிவு II

## நிவாரணம் வேண்டும்

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்தகால வன செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் வழங்கப்பட்டு வந்த நட்ட ஈட்டுப் பணம் ரூபா நாலாயிரம் ஒரு வருடம் ஆகியும் மீண்டும் வழங்கப்படவில்லை இது பற்றி பொதுமக்கள் உதவி அரசாங்க அதிபர் காரி

# பஸ் சேவையினருக்கு பொலிசார் கோரிக்கை

(மட்டக்களப்பு)

எதிர்வரும் 1 ஆம் திகதி

தாவது,

வாகனச் சாரதிகள் வாகன

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்திலுள்ள கரும்பு செய்கை காணிகள் இன விகிதாசார அடிப்படையில் வழங்கப்படவில்லை என ஜனாதிபதியிடம் பல அமைப்புகள் புகார் செய்துள்ளது.

இது தொடர்பாக கரையோர விவசாயிகள் சம்மேளன பொதுச் செயலாளர் ஜனாப் ஈஸ்டன் இப்ராகீம் ஜனாதிபதிக்குகடிதம் அனுப்பியுள்ளார்.

அதில் கூறப்படுவதாவது.

வரப்பத்தான் சேனை, கல்மடு, தீகவாவி ஹிங்குரான், நீத்தை போன்ற 5 வலயங்களில் இக்காணி பகிர்ந்தளிககப்பட்டது.

இதில் சிங்களம் 2757, தமிழ் -233, முஸ்லிம் 1048 என காணி பெற்றனர். ஆனால் மாவட்ட இன விகிதாசாரம் முறையே 1772, 692, 1630 என அமைகின்றது.

எனவே இனவிகிதாசாஅடிப்படையில் செயல்படுவோம் என்றஜனாதிபதியின் கொள்கை அமுல்செய்யப்படவில்லை என இதில் கூறிள்ளளார். (37)

## பஸ் சேவையினருக்கு பொலிசார் கோரிக்கை

(மட்டக்களப்பு)

எதிர்வரும் 1 ஆம் திகதி முதல் இ. போ. ச., தனியார் வாகனங்கள் அளவிற்கு அதிகமாக பயணிகள் ஏற்றிச்செல்வதை கைவிடவேண்டும் என மட்டக்களப்பு பொலிஸ் வீதிப் போக்குவரத்துப் பிரிவு சாரதிகளைக் கேட்டுள்ளது.

இது தொடர்பாக அப்பிரிவு பொறுப்பதிகாரி திரு. எஸ். சுவர்ணகுமார் தெரிவித்ததாவது,

வாகனச் சாரதிகள் வாகன அனுமதிப்பத்திரம், லைசென்ஸ், காப்புறுதி என்பன இல்லாமல் வாகனம் செலுத்துவதை கைவிடல் வேண்டும்.

போக்குவரத்திற்கு தகுதியற்ற வாகனங்கள் சேவையில் ஈடுபடுவதை நிறுத்துதல் வேண்டும். (37)

## பட்டதாரிகள் ஐவர் வெளியேற்றப்பட்டனர்

(மட்டக்களப்பு)

வட-கிழக்கு மாகாண சபையின் பட்டதாரிகள் முகாமைத்துவ பயிற்சி நெறிக்குத் தெரிவான ஐவர் திணைக்களம் ஒன்றிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

இச் சம்பவம் தொடர்பாக கூறப்படுவதாவது,

மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் திணைக்களமொன்றிற்கு மேற்படி ஐவரும் முகாமைத்துவ பயிற்சி நெறிக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

திணைக்கள உயரதிகாரி இதுபற்றி தனது தலைமையகத்துடன் தொடர்பு கொண்டபோது ''அனுமதிக்க வேண்டாம். வெளியேற்றி விடவும்'' எனத்தொலைபேசியில் பணிப்புரை விடுக்கப்பட்டது.

ஏமாற்றமடைந்த ஐவரும் தற்போது செயலகத்தில் பயிற்சி பெறுகிறார்கள். (37)

### சட்டவிரோத வடிசாராயம்

## விடுதலைபுலிகளால் பிடிக்கப்பட்டது

(விசேட நிருபர்)

யாழ். முலவைப் பகுதி வீதியில் நேற்று முன்தினம் (14-03-90) காலை 10 மணியளவில் திடீர் நடவடிக்கை மேற்கொண்டதில் ஆறு பைவர் வடிசாராயம் கலக்கக் கூடிய திரவம் கண்டு பிடிக்கப்பட்டது.

குருநகர் தமிழீழ விடுதலைப் புலிகள் பொறுப்பாளர் அமலனின் உத்தரவின் பேரில் சென்ற குழுவே மேற்படி நடவடிக்கையில் சட்டவிரோத மது விற்பனையை கண்டு பிடித்தது.

அதன் பின்பாக வடிசாராயம் உற்பத்தி செய்ய... திருநெல்வேலிக் கொ... யைச் சேர்ந்த நபரும் ... முக்கு அழைக்கப்பட்டு எச்சரிக்கை செய்து விடுவிக்கப்பட்டார்.

அவர்களிடம் இருந்து மீட்கப்பட்ட வடிசாராய திரவம் அவர்களாலேயே கடலில் ஊற்றி அழிக்கப்பட்டது.

இச்சம்பவத்தின் பின்பாக குருநகர் போதை வஸ்து ஒழிப்புச் சங்கம் அப்பகுதியில் சட்ட விரோத மதுபான விற்பனையைத் தடுக்கும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி உள்ளது. (21)

பட்டு வருகிறது.

ஆலயத்தைத் தரிசிப்பதில் இடையூறு இல்லாமல் மதில் சுவர்கள் மத்தியில் கம்பி யன்னல்கள் பொருத்தப் பட்டுள்ளன. (21)

## நிவாரணம் வேண்டும்

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்தகால வன செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் வழங்கப்பட்டு வந்த நட்ட ஈட்டுப் பணம் ரூபா நாலாயிரம் ஒரு வருடம் ஆகியும் மீண்டும் வழங்கப்படவில்லை இதுபற்றி பொதுமக்கள் உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களிலும் அரசாங்க அதிபர் காரியாலயங்களிலும் சென்று விசாரணைகள் மேற்கொள்கின்றனர், (29)

## மட்டு - யாழ் இரவு பஸ்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - யாழ்ப்பாணம் இ. போ. ச. இரவு பஸ் சேவை விரைவில் ஆரம்பிப்பது குறித்து இ. போ. ச. நிர்வாகம் ஆராய்ந்து வருகிறது.

தற்போது காலை சேவையில் ஈடுபட்டுள்ள சொகுசு பஸ் சேவை இரவுசேவையாக மாற்றப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது

அதே நேரம் மேற்படி சொகுசு பஸ் சேவையின் ஆசனப் பதிவு என ரூபா பத்து மேலதிக அறவீடு நிறுத்தப்படல்வேண்டும் என பயணிகள் கோருகிறார்கள். (37)

## இன்று கும்பாபிஷேகம்

(சுழிபுரம்)

...கானை சாவகச்சேரி ஸ்ரீ ...ளி தெய்வானை சமேத ...ப்பிரமணிய சுவாமியின் புன...ர்த்தனப் பிரதிஷ்டா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

பல லட்சரூபா செலவில் அமைக்கப்பட்ட மூன்று தள விமானமும் மற்றும் புதிய திருவுருவங்களும் கும்பாபிஷேகத்தின் சிறப்பு இடத்தைப் பெற்றுள்ளன. பிரதிஷ்டா குருவாக புன்னாலைக் கட்டுவன் பிரம்மஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் கும்பாபிஷேகத்தை நடாத்தி வைப்பார் (17)


# 90 A/L

**Physics**
BY
சோதிலிங்கம்
TUE -- THU -- 4.00

**Mechanics**
WED -- 4.00 - 6.00

**Electricity**

**PAPER CLASS**
SAT & SUNDAY 1.30
MODEL PAPER

பிரிவு II

MODEL PAPER
Mon & Friday 5-00 — 6-00

ஆரம்பம்: 19-03-1990

(B. 283)



**Diploma in Home Economics**

| | |
|---|---|
| Cake Icing | Hair Styling |
| Cookery | Flower - Making |
| Needle Work | Glass and Fabric Painting |
| Handicraft | Kolam |

பயிற்சிக் காலம் 6 மாதங்கள்
புதிய வாரநாள் வகுப்புகளும்
தொழில் புரியும் பெண்களின் வசதி கருதி

ஞாயிறு வகுப்புக்களும் தற்போது
ஆரம்பமாகியுள்ளன.

சேரவிரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

**கலாலயா**

நுண்கலை, மனையியல் நிறுவனம்
விக்டோறியா வீதி,
(ஆஸ்பத்திரியின் பின்புறம்)
யாழ்ப்பாணம்.

(B.275)


யாழ். 'பொண்ட்' கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியப் பொதுச் சபைக் கூட்டத்தில் இத்தீர்மானம் மேற்க்கொள்ளப்பட்டது. திரு. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டடத்தில் மாணவர்களின் நன்மை கருதி சேவை நோக்குடன் ரியூட்டரிகள் இயங்க வேண்டும் என்றும் மாணவர்களிடம் பல வழிகளிலும் பணத்தைச்சுரண்டும் முறையினைக் கைவிட்டு நியாயமான கட்டணங்களை மாத்திரமே அறவிட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. (23)

## ஜப்பான் உணவு உற்பததிக்கு உதவி

இலங்கையின் உணவு உற்பத்தி நடவடிக்கைகளுக்கு ஐப்பான் அறுபத்தொரு கோடி ரூபாவை வழங்குகின்றது. இது தொடர்பான ஒப்பந்தம் நேற்றுக்காலைகைச்சாத்திடப்பட்டது இதில் ஜப்பானியத் தூதுவர் இஷா மோநிஷாவும் நிதியமைச்சரின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கமும் கைச்சாத்திட்டனர்

1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஜப்பான் இலங்கையின் உணவு உற்பத்திக்கென வழங்கியிருககும் பதின்மூன்றாவது நிதியுதவி இதுவாகும்.

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளில் விவசாயத் துறையில் தன்னிறைவு பெற இது உதவியுள்ளது. இந்த உற்பத்திக் திட்டத்தின் கீழ் உரம், விவசாய உபகரணங்களும் வழங்கப் படவுள்ளன.


தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
**வருஷம் 16**
(கலர்)

**ஸ்ரீதர் (யாழ்)**
10-30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா
**அவள் ஒரு தொடர்கதை**



**வின்சர் - யாழ்**
10.30 2.30 4.30 7.00
**SUPER MAN**
குடும்பத்துடன்
பார்க்கவேண்டிய படம்


## மதுபானத் தடை

(மட்டுநகர்)

கிழக்கு மாகாண கிராமப் புறங்களில் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்த வடிசாராயம் காச்சுதல், விற்பனை செய்தல் போன்ற சட்டவிரோதச் செயல்களை தமிழீழ விடுதலைப் புலிகள் கிழக்கு மாகாணத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததைத் தொடர்ந்து தடை விதித்தனர். இதனைத் தொடர்ந்து அண்மைக் காலத்தில் இவை நிறுத்தப் பட்டுள்ளது. (29)


**மீண்டும் யாழ்நகரில்**

உங்களுக்குத் தேவையான சிலோன் புறுவரி கூட்டுத் தாபனத்தின் உற்பத்திப் பொருட்களை இல, 6 செம்மாதெரு யாழ்ப்பாணத்திலுள்ள கிளையில் பெற்றுக்கொள்ளலாம். யாழ்ப்பாணத் திலிருந்து வவுனியா வரை டிலிவரி செய்யப் படும். மேலும் விபரங்கட்கு நிர்வாகத்தின ருடன் தொடர்பு கொள்ளவும்.

**சிலோன் புறுவரி லிமிடெட்**
இல- 6 செம்மார் தெரு
யாழ்ப்பாணம்,

(B - 285)


பொதுசன நூலகம் 1753-07 பகுதி

# "காஷ்மீர்ப் போராட்டம் எமது நாட்டில் நடைபெறும் போராட்டத்திற்கு ஈடானது" - பெனாசிர்



## காஷ்மீரில் அடாவடித்தனத்தால் கஷ்டப்படப்போவது பாகிஸ்தானே

**வி. பி. சிங்**



(புதுடெல்லி)

"காஷ்மீரில் நடக்கும் போராட்டம் சுதந்திரத்திற்கான போராட்டம், இப் போராட்டமானது எமது நாட்டில் நடைபெறும் போராட்டத்திற்கு ஈடானது பாகிஸ்தான் மீது இந்தியா சுமத்தி வரும் குற்றச்சாட்டுகள் ஏற்க முடியாதவை" என்று ஜம்மு காஷ்மீர் தொடர்பாக இந்தியப் பிரதமர் வி. பி. சிங் விடுத்த எச்சரிக்கைக்கு பதிலளிப்பது போன்று பாகிஸ்தான் பிரதம மந்திரி பெனாஸிர் பூட்டோ தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னதாக செவ்வாய்கிழமை இந்தியப் பாராளுமன்றத்தில் நடைபெற்ற காஷ்மீர் பற்றிய விவாதத்தின் போது இந்தியப் பிரதமர் வி. பி. சிங் கீழ்க்கண்டவாறு தெரிவித்தார்.

பாகிஸ்தான் அடாவடித்தனமாக எதையும் செய்ய முனைந்தால் இந்தியா உடனே உறுதியான பதிலடி கொடுக்கும் என்று எச்சரித்தார். அடாவடித்தனமான செயலால் கஷ்டப்படப் போவது இந்தியா அல்ல பாகிஸ்தான் மட்டுமே என்பதை வலியுறுத்தினர். இவ்வாறு வி. பி. சிங்கும், உள்துறை அமைச்சர் முக்தி முகமதுசெய்யதும் பாகிஸ்தானுக்கு எதிராக விடுத்த எச்சரிக்கைக்கு பதில் அளிக்கும் முகமாக பாகிஸ்தான் பிரதமர் பெனஸிர் பூட்டோ இவ்வாறு தெரிவித்தார். மேலும் இவர் குறிப்பிடுகையில் ஆப்கானிஸ்தானிலும், வியட்நாமிலும் வல்லரசுகளான சோவியத்யூனியனும் அமெரிக்காவும் தோல்வி கண்டதை இந்தியா விளங்கிக் கொள்ள வேண்டும் என்று கூறினர்.

### செயற்குழுவின் திட்டங்கள்

இதே வேளை புதன்கிழமை பாராளுமன்றத்தில் நடைபெற்ற காஷ்மீர் பற்றிய நாள் முழுவதுமான விவாதத்தின் போது பல்வேறு கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன. ஜம்மு காஷ்மீரில் வளர்ச்சிப்பணிகளை மீண்டும் துவக்குவதற்கும், இளைஞர்களுக்கு வேலை அளிப்பதற்கும் வகை செய்யும் திட்டங்களை காஷ்மீர் விவகாரம் குறித்த அரசிய கட்சிகளின் செயற்குழு தயாரித்து வரவேண்டும் என்று காஷ்மீர் விவகாரங்களை கவனித்து வரும் ரயில்வே அமைச்சர் ஜார்ஜ் பெர்னைன்டோ தெரிவித்தார். மேலும் அவர் குறிப்பிடுகையில் இங்கு நடைபெறும். தீய பிரச்சாரங்களை உறுதியாக சமாளிக்க வேண்டும் என்றும் இந்த விடயம் பற்றி செயற்குழு ஆராய வேண்டும் என்றும் குறிப்பிட்டார். காஷ்மீரை விட்டு வெளியேறும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை உடனடியாக கவனிக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினர். காஷ்மீரில் உள்ள முகாமுக்கு இந்த செயற்குழு இந்த வார இறுதியில் செல்ல திட்டமிட்டுள்ளதாவும் அவர் கூறினர்.

### அனைத்துக் கட்சிகளின் வேண்டுகோள்

ஜம்மு, காஷ்மீரில் ஜனநாயக தேசிய வாத சக்திகளின் ஆதரவைத் திரட்ட வேண்டும் என்றும் பிரிவினவாத சீர்குலைவு சக்திகளையும் வெளியார் குறுக்கீட்டையும் சமாளிப்பதற்கு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் கேட்டுக் கொண்டார்கள்.

## இப்படியும் ஓர் சத்திரசிகிச்சை

(பரிஸ்)

நிலத்துக்கடியில் ஓடும் புகையிரதமொன்றிலிருந்து தவறி விழுந்த பிரயாணி ஒருவர் தனது கால் பாதத்தை இழந்துள்ளார். துண்டிக்கப்பட்ட காலை அவரின் கை மணிக்கட்டுடன் வைத்துத் தைத்துள்ளதாக பரிஸ் ஆஸ்பத்திரிப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். விபதத்துக்குள்ளாகிய பிரயாணியின் காற்புண் ஆறியதும், பாதம் மீளவும் காலில் வைத்துத் தைக்கப் படுமாம்.

"இது சிரிப்புக்குரிய விஷயமல்ல. இதைவிடக் காலைக் காப்பாற்றுவதற்கு எமக்கு வேறு வழியில்லை." இவ்வாறு ஆஸ்பத்திரியைச் சேர்ந்த பெண் டாக்டர் ஒருவர் தெரிவித்தார்.

சென்ற வாரம் ஆறு மணித்தியாலங்கள் நடந்த அறுவைச் சிகிச்சையின் பிறகே துண்டிக்கப்பட்ட கால் பாதத்தை மணிக்கட்டுடன் வைத்துத் தைத்துள்ளார்கள். நோயாளியின் பெயரை வெளியிட விரும்பாத ஆஸ்பத்திரி வட்டாரங்கள், நினைவிழந்த நிலையிலேயே அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கின்றன.

## நோன்புக்கு விடுதலைப் புலிகள் ஒத்துழைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களிலுள்ள முஸ்லிம்கள் புனித ரம்zான்

இதற்கான உறுதிமொழி தமிழீழ விடுதலைப் புலிகளிடம் முஸ்லிம் சமூக, சமய அமைப்புகளிடம் வழங்கப்

## கிறீஸ்தவ, இஸ்லாம் பாடங்களில் இந்து மாணவர்கள் சித்தி

**'இந்து கலாசாரம்' தகவல்**

(வவுனியா)

வடமேல் மாகாணத்தில் அமைந்திருக்கும் புத்தளத்தில் இந்து சமயத்தைப் படிப்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லை. இதனால் இந்துப்பிள்ளைகள் கிறீஸ்தவ சமயத்திலும், இஸ்லாமிய பாடத்திலும் சித்தியடைந்து வருகின்றார்கள்.

இவ்வாறு கொழும்பிலிருந்து இந்து கலாச்சார மன்றம்

இக்கட்டுரையில் மேலும் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது: புத்தளம் மாவட்டத்தில் ஒரு காலத்தில் தமிழ் வழக்கிலிருந்த நிலை மாறி இன்று தமிழும் சிங்களமும் கலப்பு மொழியாக தமிழ் மக்கள் மத்தியில் உபயோகிக்கப் படுகின்றது.

கணபதிப்பிள்ளை என்ற பெயர் கன்னங்கரா என்றும் காப்பள்ளிய என்றும் ஆராய்ச்சிகட்டு என்ற ஆராய்ச்சிகட்டுவ என்றும் பெயர் மாற்றம் அடைந்துள்ளது.

இது மாத்திரமன்றி அண்மைக் காலத்தில் ஆட்கள் சிலர் மதமாற்றத்துக்கும் ஆளாகியுள்ளனர். கவர்ச்சியான நிதியுதவிகள், வெளிநாட்டு நிவாரண உதவிகள், மற்றும் வேலைவாய்ப்பு செதி

## காற்றும் கடவுளும்

கடவுளைக் கண்டீரோ என்று கேட்பவர் பலர்!

கேட்பவர் காணவில்லை. அதனால் இருக்கின்றார் எனச்சொல்பவருடன் வாதங்கள்தொடுக்கப்படுகின்றன

கடவுள் தூணிலும் இருப்பார்; துரும்பிலும் இருப்பார்

அடே.........பாதகனே பழம்பாயே எனக் கோபம் கொள்கின்றனர்.

கடவுளை வேண்டாம்; காற்றை உம்மால் காண முடிகின்றதா?

இல்லையே..............;

புகைபோகின்றது என்றார் நண்பர் ஒருவர்.

கண்ணால் கண்டது புகை.

காணாமல் கண்டது காற்று.

புழுதி வாரி இறைக்கின்றது.

வாரி இறைக்கும் புழுதி எம்முடன் மோதுகின்றது.

உடலைத் தழுவிச் செல்கின்றது. புழுதியுடன் மோதிய காற்றை எம்மால் இனம் காண முடியவில்லை.

காற்றை இனம்காண முடியாத மனிதன் கடவுளை இனம் காண்பது எப்படி?

— வன்னியூரான்

## பஞ்சாப்பில் சட்டசபைத் தேர்தல்

(சண்டிகார்)

பஞ்சாப்பில் விரைவில் சட்டசபைகளுக்கான தேர்தல் நடைபெறும் என இந்தியப் பிரதமர் வி. பி. சிங் புதன் அறிவித்தார். இவர் புதன்கிழமை சண்டிகார் சென்றிருந்த போது இதனைத் தெரிவித்தார் மேலும் அவர் குறிப்பிடுகையில் அரசியல் கட்சிகளுடன் கலந்தாலோசித்து விட்டு இதனை தம் விரைவில் அறிவிப்பார் என்றும் குறிப்பிட்டார். மாநிலத்தில் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக ஆளுநர் ஆட்சி நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

சண்டிகாரில் ஏற்பாடு செய்த விவசாயிகள் பேரணியில் பேசிய வி.பி சிங் மேலும் குறிப்பிடுகையில் பஞ்சாப் மாநிலத்தை நிர்வகிப்பதில் ஆளுநருக்கு உதவி செய்ய விரிவான ஆலோசனைச் செயற்குழு ஒன்றை அமைக்க அரசு தீர்மானித்திருக்கிறது என்று தெரிவித்தார். விவசாயிகள் முன்னாள் ராணுவத்தினர் போன்ற சமூகத்தின் எல்லாப் பிரிவினர்க்கும் இந்த செயற் குழுவில் போதுமான பிரதிநிதித்துவம் அளிக்கப்படும் என்றும் பொது மக்களின் குறைகளை தாம் செவிசாய்ப்பதாகவும். அபோகரிலும், சரந்தாரிலும் நடந்தது போன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

## வெடிகுண்டுக் கருவி

(மொன்றியல்)

கனடாவில் வெடி குண்டுகளை உடனடியாக மோப்பம் பிடித்து கண்டு பிடிக்கும் கருவியொன்று கண்டுபிடிக்கப்பட்டு அங்கு டொரான்ரோ விமான நிலையத்தில் பரிசோதனைக்காக கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆறு நொடியில் வெடி குண்டுகளை இக் கருவி கண்டுபிடிக்கும்.

படுமாம்.

''இது சிரிப்புக்குரிய விஷயமல்ல. இதைவிடக் காலைக் காப்பாற்றுவதற்கு எமக்கு வேறு வழியில்லை.'' இவ்வாறு ஆஸ்பத்திரியைச் சேர்ந்த பெண் டாக்டர் ஒருவர் தெரிவித்தார்.

சென்ற வாரம் ஆறு மணித்தியாலங்கள் நடந்த அறுவைச் சிகிச்சையின் பிறகே துண்டிக்கப்பட்ட கால் பாதத்தை மணிக்கட்டுடன் வைத்துத் தைத்துள்ளார்கள். நோயாளியின் பெயரை வெளியிட விரும்பாத ஆஸ்பத்திரி வட்டாரங்கள், நினைவிழந்த நிலையிலேயே அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கின்றன.

## நோன்புக்கு விடுதலைப் புலிகள் ஒத்துழைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களிலுள்ள முஸ்லிம்கள் புனித ரம்ழான் நோன்பு நாட்களில் தமது மத அனுஷ்டானங்களில் ஈடுபடுவதற்கான சகல ஒத்துழைப்புகளும் தமிழீழ விடுதலைப் புலிகளால் வழங்கப்படும்.

இதற்கான உறுதிமொழி தமிழீழ விடுதலைப் புலிகளிடம் முஸ்லிம் சமூக, சமய அமைப்புகளிடம் வழங்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 29 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 29 ஆம் திகதி வரை புனித ரம்ழான் நாட்களாகும்.

(37)

## கிளிநொச்சி கச்சேரியில் புதிய கட்டிடம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிக் கச்சேரியில் மேலதிக பதிவாளர் அலுவலகம் ஒன்று கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

சுமார் 5 இலட்சம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட இக் கட்டிடத்தில் இப் பதிவாளர் அலுவலகம் அமைந்துள்ளது. மேலதிக பதிவாளர் திரு. ந. சதாசிவஐயர் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் ஜனாதிபதியின் சுவர்ணபூமி உறுதிகளை காணி அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியத்திடம் முதலாவதாக வழங்கி பதிவக வேலையை ஆரம்பித்து வைத்தார்.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் பேசுகையில் கூறியதாவது:

கிளிநொச்சி மாவட்ட மக்கள் கடந்த காலங்களில் தமது பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்களைப் பெறுவதற்காக யாழ்ப்பாணத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது. இன்றிலிருந்து அந்த நிலை மாறி, சகலவற்றையும் கிளிநொச்சியிலேயே பெறக்கூடியதாகவுள்ளது.

கட்டிட வசதி இல்லாததனாலேயே இவ்வளவு காலமும் பதிவகம் இங்கு இயங்க முடியாது இருந்து வந்தது. 1897 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையான பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகளை இங்கே தமிழிலோ அன்றி ஆங்கிலத்திலோ பெற்றுக் கொள்ள முடியும் என்றார்.

## மானிப்பாய் தபாலகத்துக்கு நிரந்தர கட்டடம் தேவை

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் தபாற் கந்தோருக்கு நிரந்தர கட்டடம் அமைக்குமாறு வலிகாமம் தென் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனசமூக நிலையங்களின் சமாஜம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இத்தபாற் கந்தோருக்கு கீழ் பத்துக்கு மேற்பட்ட உப தபால் அலுவலகங்கள் இருப்பதோடு. அதிக வருமானமும் ஈட்டி வருகிறது.

அண்மைக்கால ராணுவ நடவடிக்கைகளால் தனியார் கட்டடங்களில் போதிய வசதிகள் இன்றி இது செயற்பட்டு வருகிறது.

இந்தத் தீர்மானம் யாழ். தபால் அத்தியட்சகர், தபால் தந்தி தொடர்புகள் அமைச்சர் ஆகியோருக்கும் அனுப்பப்படவுள்ளது.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற காஷ்மீர் பற்றிய எதிர்நோக்கும் பிரச்சினைகளை உடனடியாக கவனிக்க கட்சி உறுப்பினர்களும் கேட்டுக் கொண்டார்கள்.

## கிறீஸ்தவ, இஸ்லாம் பாடங்களில் இந்து மாணவர்கள் சித்தி

### 'இந்து கலாசாரம்' தகவல்

(வவுனியா)

வடமேல் மாகாணத்தில் அமைந்திருக்கும் புத்தளத்தில் இந்து சமயத்தைப் படிப்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லை. இதனால் இந்துப்பிள்ளைகள் கிறீஸ்தவ சமயத்திலும், இஸ்லாமிய பாடத்திலும் சித்தியடைந்து வருகின்றார்கள்.

இவ்வாறு கொழும்பிலிருந்து இந்து கலாச்சார மன்றம் வெளியிட்ட ''இந்து கலாசாரம்'' என்ற திங்கள் இதழ் செய்தியொன்றினை வெளியிட்டுள்ளது.

இக்கட்டுரையில் மேலும் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது: புத்தளம் மாவட்டத்தில் ஒரு காலத்தில் தமிழ் வழக்கிலிருந்த நிலை மாறி இன்று தமிழும் சிங்களமும் கலப்பு மொழியாக தமிழ் மக்கள் மத்தியில் உபயோகிக்கப்படுகின்றது.

கணபதிப்பிள்ளை என்ற பெயர் கன்னங்கரா என்றும் சிரியாணி என்றும் மாற்றம் அடைந்துள்ளது. இம்மாவட்டத்தில் அநேகமான தமிழ்க் கிராமங்கள் பலவும் இன்றும் பெயர் மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது.

ஆனைமடுவம் என்ற பெயர் இப்போது ஆனைமடுவ என்றும், காக்கைப்பள்ளி காக்காப்பள்ளிய என்றும் ஆராய்ச்சிகட்டு என்ற ஆராய்ச்சிகட்டுவ என்றும் பெயர் மாற்றம் அடைந்துள்ளது.

இது மாத்திரமன்றி அண்மைக் காலத்தில் ஆட்கள் சிலர் மதமாற்றத்துக்கும் ஆளாகியுள்ளனர். கவர்ச்சியான நிதியுதவிகள், வெளிநாட்டு நிவாரண உதவிகள், மற்றும் வேலைவாய்ப்பு வசதிகளைக் காட்டி மதமாற்றம் நடைபெற்று வருகின்றது.

''இந்து கலாசார அமைச்சர் பி பி தேவராஜ் இது விடயத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்'' இவ்வாறு அக்கட்டுரையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## பஸ் வேண்டும்

(புங்குடுதீவு)

புங்குடுதீவின் கிழக்குப் பகுதியாகிய வல்லன் பகுதி பிரயாணிகளின் நலன் கருதி இப்பகுதி ஊடாக இ. போ. ச. பஸ் சேவை ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று இப் பகுதி மக்கள் விரும்புகிறார்கள்.

பல வருடங்களுக்கு முன்னால் இப்பகுதி யூடாக இ. போ. ச. பஸ் சேவை நடாத்தப்பட்டு வந்தபோதிலும் இடையில் ஏற்பட்ட நாட்டுக்குழப்ப நிலமை ளால் இச்சேவை நிறுத்தப்பட்டது.

(22)

## முல்லைத்தீவில் நாட்டுக்கூத்து

(முல்லைத்தீவு)

முல்லை நாட்டார் வழக்கியல் பாதுகாப்புக் கழக நிதிக்காக முல்லை அரசாங்க அதிகாரிகளும், ஆசிரியர்களும் வழங்கும் ''சிலப்பதிகாரம் தந்த கோவலன்'' நாட்டுக் கூத்து எதிர்வரும் 18ஆம், 19ஆம், 20ஆம் திகதிகளில் முறையே முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி திறந்த வெளி அரங்கு புதுக்குடியிருப்பு மகா வித்தியாலய முன்றல், முல்லைத்தீவு திறந்த வெளி அரங்கு ஆகிய இடங்களில் மேடையேறவுள்ளது.

இந்நாடகத்தினை செல்லையா மெற்றாஸ்மயில் தயாரித்துள்ளார். அண்ணாவியார் வே. சுப்பிரமணியம் இசை அமைப்பு செய்யவுள்ளார்.

இந் நாடகத்தினை முல்லை நாட்டார் வழக்கியல் பாதுகாப்புக்கழகம் வழங்குகின்றது

## வீரர்கள் தோல்வியால் பொறாமை கொள்ளக் கூடாது

### கரவெட்டி உதவி அரச அதிபர் பேச்சு

(கரவெட்டி)

விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெறுகின்ற இப்போட்டியானது விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கிடையே உள்ள திறமைகளை வெளிக்கொணர பேருதவி புரிகின்றது.

இவ்வாறு கரவெட்டி பிரதேச விளையாட்டாளர் கழகத்தினால் நடாத்தப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பேசிய கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரை கூறினார்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இந் நிகழ்ச்சிச்கு பிரதேச விளையாட்டாளர் கழகத்தின் உபதலைவர் திரு. எஸ். கே. இராசேந்திரம் தலைமை வகித்தார்.

திரு. இ. ஐயாத்துரை தொடர்ந்து பேசுகையில்;

இப்போட்டியில் கலந்து கொண்ட ஒவ்வொரு வீரர்களும் வீராங்கனைகளும் வெற்றியையும் தோல்வியையும் சமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும். தோல்வி அடைந்தவர்கள் மனஞ் சோராது தொடர்ந்தும் வெற்றி பெற போட்டியிட வேண்டும். ஆனால் பொறாமை கொள்ளக் கூடாது என்றார்.

யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. கே. ஏகாம்பரம் உரைநிகழ்த்துகையில்,

பிரதேச மட்டத்தில் நடைபெற்ற இப்போட்டியில் வெற்றியீட்டிய கழகங்களும், அவர்களின் உறுப்பினர்களும் நடைபெறவிருக்கும் மாவட்ட, தேசிய மட்டங்களிலான போட்டிகளிலும் கலந்து கொண்டு உங்களது திறமைகளை வெளிக்காட்ட வேண்டும் என்றார்.

கரவெட்டி, விளைய[illegible] அதிகாரியும், பிரதேச வி[illegible] யாட்டாளர் கழகத்தி[illegible] லாளருமான திரு வி.[illegible] முத்து நன்றி தெரிவித்தார்.

(18)

## கொடிதினம்

(கிளிநொச்சி)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கொடிதின விழா 27-3-90 செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

(49)

நடைபெறும் என இந்தியப் பிரதமர் வி. பி. சிங் புதன் அறிவித்தார். இவர் புதன் கிழமை சண்டிகார் சென்றிருந்த போது இதனைத் தெரிவித்தார் மேலும் அவர் குறிப்பிடுகையில் அரசியல் கட்சிகளுடன் கலந்தாலோசித்து விட்டு இதனை தம் விரைவில் அறிவிப்பார் என்றும் குறிப்பிட்டார். மாநிலத்தில் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக ஆளுநர் ஆட்சி நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

சண்டுகாரில் ஏற்பாடு செய்த விவசாயிகள் பேரணியில் பேசிய வி. பி சிங் மேலும் குறிப்பிடுகையில் பஞ்சாப் மாநிலத்தை நிர்வகிப்பதில் ஆளுநருக்கு உதவி செய்ய விரிவான ஆலோசனைச் செயற்குழு ஒன்றை அமைக்க அரசு தீர்மானித்திருக்கிறது

கப்படும் என்றும் பொது மக்களின் குறைகளை தாம் செவி சாய்ப்பதாகவும். அபோகரிலும், சரந்தாரிலும் நடந்தது போன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

## வெடிகுண்டுக் கருவி

(மொன்றியல்)

கனடாவில் வெடி குண்டுகளை உடனடியாக மோப்பம் பிடித்து கண்டு பிடிக்கும் கருவியொன்று கண்டுபிடிக்கப்பட்டு அங்கு டொரான்ரோ விமான நிலையத்தில் பரிசோதனைக்காக கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆறு நொடியில் வெடி குண்டுகளை இக் கருவி கண்டுபிடிக்கும்.

## விடுதலைப்புலிகள் பாதுகாப்பு முஸ்லிம் பெரியோர்கள் நன்றி

(மட்டக்களப்பு)

காத்தான்குடி, கல்முனை ஆகிய இடங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட ஆயுதகளைவு நடவடிக்கையின் பின்பு அப்பகுதிகளில் எவ்வித அசம்பாவிதங்களும் இல்லை என முஸ்லிம் சமய, சமூக பிரமுகர்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்

முஸ்லிம் ஆயுத பாணி குழுவொன்றின் நடவடிக்கைகளினால் மக்கள் மத்தியில் அன்று நிலவிய பயம், பதட்டம் பீதி இன்று தமிழீழ விடுதலைப் புலிகள் நடவடிக்கையினால் தணிந்து விட்டது என்றும் அப்பிரமுகர்கள் தெரிவித்தனர்

தமிழீழ விடுதலைப் புலிகள் மூலம் தமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என்ற நம்பிக்கை எமக்கு என்றும் உண்டு என்றும் தெரிவித்தனர்.

(37)

## பின் கதவால் எல்லாம் நடக்கிறது

(மட்டககளப்பு)

மட்டக்களப்பு செயலகத்தில் அண்மைக்காலமாக திடீர் திடீர் என பதவி உயர்வுகள் சிலருக்கு கிடைத்துள்ளமை குறித்து சக ஊழியர்கள் மத்தியில் கிசு கிசுக்கள் காணப்படுகின்றன.

நேர்முக சேவை மூப்புகணிக்கப்படவில்லை.

[illegible]டிஅடிபடையில் வழங்[illegible]டுள்ள திடீர் பதவி [illegible]வுகளில்சிரேஷ்ட ஊழியர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள்.

அதே நேரம் மேற்படி பதவிகள் பெற தகுதியுடைய உத்தியோகத்தர்களும் புறக்கணிக்கப்பட்டு உள்ளார்கள்

பின் கதவு, அதிகாரி மட்டத்தில் செல்வாக்கு போன்ற வழிகள் நாடினால் மேற்படி பதவிகள் கிடைக்கும் என சிரேஷ்ட அதிகாரிகள் கவலையுடன் ஈஸ்நாதம் செய்தியாளரிடம் தெரிவித்தனர்

(37)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கை முகாம் மூடப்படுகிறது

(மட்டக்கனப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஸ்ரீலங்கா இராணுவ முகாம்கள் வாபஸ் பெறப்படவிருப்பதாக தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

மேற்படி செய்தி இம் மாதம் 8 ஆம் திகதி ''ஈழநாதம்'' வெளியிட்டிருந்தது. முதல் நடவடிக்கையாக செங்கலடி பதுளை வீதி கரடியனாறு முகாம் கடந்த வார இறுதியில் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

அடுத்த கட்ட நடவடிக்கையாக கிரான் முகாம் வாபஸ் பெறப்படலாம் என கூறப்படுகிறது.

(3[illegible])

## வதிரி டயமன்ஸ் கழகத்தின்

# 50 ஆவது விழாவையொட்டி உதைபந்தாட்டப் போட்டி

(கரவெட்டி)

வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் தனது 50ஆவது ஆண்டு நிறைவையொட்டி பொன்விழா உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நடாத்தத் தீர்மானித்துள்ளது.

7பேர் கொண்ட இவ் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிக்கு பருத்தித்துறை, யாழ்ப்பாண மாவட்ட உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கின்ற கழகங்கள் பங்கு பற்றலாம்.

வெற்றியீட்டும் கழகத்திற்கு தங்கப்பதக்கம் வழங்கப்படும். பங்குபற்றும் கழகங்கள் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், வதிரி டையமன்ஸ் விளையாட்டுக் கழகம், வதிரி என்ற முகவரியில் தொடர்பு கொள்ளும்படி மேற்படி செயலாளர் திரு. ரி. வரதராசா தெரிவித்துள்ளார். (18)

# வடமராட்சி பகுதியில் வீதிகள் நடமாடமுடியாது படுமோசம்

(கரவெட்டி)

வடமராட்சிப்பகுதியில் பல வீதிகள் இன்னமும் திருத்தப்படாத நிலையில் மிக மோசமாக குன்றும் குழியுமாக காணப்படுகின்றன.

'லிபரேசன் ஒப்பரேசன்' நடவடிக்கைகள் இந்திய இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இவை திருத்தப்படவில்லை ஆனால் தற்போது நிலைமை வழமைக்கு திரும்பியுள்ளதால் இவற்றின் திருத்தவேலைகளை ஆரம்பிக்குமாறு இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கோருகின்றனர்

தற்போது இடம்பெயர்ந்து சென்ற வடமராட்சி மக்கள் தமது இடங்களுக்கு திரும்பிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் வீதிகளில் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து நமது நிருபர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டபோது மேலிடத்திலிருந்து உத்தரவுகள் வரவேண்டும் என்று கூறுகிறார்.

பத்திரிகைகளிலும் தொடர்புசாதனங்களிலும் வடபகுதி வீதிகளைத் திருத்த உலக வங்கி உதவி ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி என்று அடிக்கடி கூறப்படுகிறது.

எனவே இந்த நிதியுதவிகள் மூலமாவது பாதிக்கப்பட்ட வீதிகளைத் திருத்துமாறு வடமராட்சி மக்கள் கேட்கின்றனர்.

## கல்வியதிகாரி புகழாரம்

# பெரியபுலம் வித்தியாலயம் புதுமெருகு பெறுகிறது

(விசேட நிருபர்)

''மிசனறி பாடசாலையாக ஏறத்தாள 165 ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலை யாழ்.பெரியபுலம் மகா வித்தியாலயம் என்ற பெயரில் புது மெருகு பெறுவது மகிழ்ச்சிக்குரியதாகும்.''

யாழ். பெரியபுலம் மகா வித்தியாலய வருடாந்த மெய் வல்லுனர் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். கோட்டக் கல்வி அதிகாரி திரு.சி. தியாகராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதிபர் க.கனகசிங்கம்தலைமையில் போட்டிகள் நடைபெற்றன.

திரு. சி. தியாகராசா மேலும் தமதுரையில் ''கொக்குவில் இந்துக்கல்லூரி' யாழ். இந்துக்கல்லூரி போன்ற பிர பல பாடசாலைகளுக்கு நடுவே மாணவர்களின் திறமையால் மிளிர்ந்து வருவது யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயம்'' என்றார்.

வித்தியாலய அதிபர் திரு. க. கனகசிங்கம் தலைமையுரையில் யாழ். கோட்டக் கல்விப் பாடசாலைகள் மத்தியில் விளையாட்டுப் போட்டிகளில் பெரியபுலம் மகா வித்தியாலயம் 17 வயதுக்குட்பட்டவர் பிரிவில் இரண்டாவது இடத்தைப்பெற்றுள்ளது என்று தெரிவித்தார்.

சிறப்பு விருந்தினர் யாழ். உடற்கல்வி அதிகாரி திரு. த. அருணகிரிராசாவும் பேசினார்' திருமதி. யசோதா தியாகராசா பரிசில்களை வளங்கினார். ஆசிரியர் ஜனாப் சாஜகான் நன்றி தெரிவித்தார். (21)

## காணிப்பத்திரம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஆனந்தநகர் கிராமத்தில் வசித்து வந்த மக்களுக்கு காணி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டது. கிளிநொச்சிக் காணி அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியம் காணிக் கச்சேரி நடாத்தி காணியில் நிரந்தரமாகக் குடியேறி வசித்து வருபவர்களுக்கே காணி அனுமதிப் பத்திரங்களை வழங்கினார். (49)

# அன்னை பூபதிக்கு அஞ்சலி நிகழ்ச்சிகள்

(மட்டக்களப்பு)

''தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்றயுத்த நிறுத்தம்''

''தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சு வார்த்தை''

மேற்படி கோரிக்கைகளைமுன் வைத்து மட்டக்களப்பில் சாகும் வரை உண்ணாவிரதக் களத்தில் உயிர் நீத்த தியாகி அன்னை பூபதி கணபதிப் பிள்ளை ஓராண்டு நினைவு தினம் ஒரு மாதகாலமாக அனுஷ்டிக்கப்படும்.

மார்ச் 19இல் உண்ணாவிரதம் ஆரம்பித்த அன்னை ஏப்பிரல் 19இல் உயிர் நீத்தார்.

மேற்படி நாட்களில் அன்னாரின் நினைவாக பல்வேறு நிகழ்ச்சிகள் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் அன்னை பூபதி நினைவு குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிரமதானம், அன்னதானம், பிரார்த்தனை, அடையாள உண்ணாவிரதம் போன்றன இதில் அடங்கும்.

இறுதி நாள் மாபெரும் அஞ்சலிக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் - முஸ்லிம் சமூக, சமய, அரசியல் பிரமுகர்கள் கலந்து கொள்கிறார்கள்.

வட-கிழக்கு மாகாணங்களிலும் அன்னை பூபதி நினைவு தொடர்பான வைபவங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக நினைவுக்குழு பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

## மெய்வல்லுனர் போட்டி

(கிளிநொச்சி)

விளையாட்டு அமைச்சினால் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடாத்தப்படவிருக்கும் மெய்வல்லுநர் போட்டி இம்மாதம் 22ஆம் திகதி வியாழக்கிழமை கிளிநொச்சி இந்து மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (49)

## பாராட்டு விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரம இளவரசராக அண்மையில் நியமனம் பெற்ற தவத்திரு. கணேசானந்த மகாதேவ சுவாமிகளுக்கு 18 - 03 - 90 ஞாயிற்றுக்கிழமை காலை சாவகச்சேரி பெரியமாவடி கந்தசுவாமியார் ஆலயத்தில் பாராட்டு விழா ஒன்று நடைபெறவுள்ளது. (49)

ஈழநாதம் பத்திரிகைக்கு
எமது அன்பு வாழ்த்துக்கள் உரித்தாகுக!

பாடசாலை உபகரணங்கள்,
பாடசாலை அப்பியாசக் கொப்பிகள்,
சிறுவர்களுக்கேற்ற பாக்குகள்
மற்றும் காப்புச் சாமான்களைப் பெற்றிட

**பஸ்தியாம்பிள்ளை புத்தகசாலை**

மெயின் வீதி,
